(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 401.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 25, சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2695/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் மஹபெலெஸ்ஸ கிராமத்தை அண்டியதாக உலகில் பிரசித்தி பெற்ற மதுநாகல வெந்நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்டதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி பிரதேசத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர் என்பதையும்;

(iv) வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலாத்துறை வசதிகள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மதுநாகல வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய சுற்றுலா வலயத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கான திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3310/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மற்றும் இற்றைவரை வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலமாக நாட்டிற்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளை அமெரிக்க டொலர்களிலும் இலங்கை ரூபாய்களிலும் வெவ்வேறாகவும்;

(ii) தொழில் ஒப்பந்தங்களை மீறியதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் நாடு கடத்தப்பட்ட அல்லது திருப்பி அனுப்பப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iv) வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்லும் இலங்கையரிடமிருந்து காப்புறுதித் திட்டம் மூலமாக ஈட்டப்பட்ட பணத்தொகையையும்;

(v) சொல்லப்பட்ட காப்புறுதி நிதியங்களிலிருந்து வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4086/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரதித் தபால் மா அதிபர் திரு. கே.ஏ.எஸ். சேனாதீரவுக்கு எதிராக தாபனவிதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் Iவது அட்டவணையின் கீழ் இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) இதில் ஒரு குற்றச்சாட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கு தவறாளியானமையால் இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக இற்றைவரை முறைசார்ந்த ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்தின் பணிப்பாளராக செயலாற்றுவதற்கு பிரதித் தபால் மா அதிபர் திரு. கே.ஏ.எஸ். சேனாதீரவுக்கு தகைமைகள் கிடையாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) திரு. சேனாதீர கருத்திட்டப் பணிப்பாளரென்ற வகையில் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை மீளஅறவிடுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி கட்டளையிட்டுள்ளார் என்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) (i) திரு. சேனாதீர தொடர்பில் எஞ்சியுள்ள மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணையொன்றினை நடாத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) கருத்திட்டப் பணிப்பாளர் என்ற வகையில் இவர் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4281/ '13

4\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டின் யூன் மாதம் தொடக்கம் அரசாங்க மருத்துவமனைகளில் நீரிழிவு நோயாளர்களின் "குளுக்கோசு" மட்டத்தை பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும் குருதிப் பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும் கீற்று (Blood Glucose Test Strips) கொள்வனவு செய்யப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(ii) குறித்த கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி துணைப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(iii) குறித்த "Blood Glucose Test Strips" ஒன்றின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்;

(iv) அரசாங்க மருத்துவமனைகளில் 2013ஆம் ஆண்டு ஒகத்து மாதம் தொடக்கம் இந்த "Glucose Strips" தட்டுப்பாடு அல்லது முற்றிலும் இல்லாத நிலை அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4571/ '13

5\.

கௌரவ அனுர திசாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான காலப் பகுதியினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஒவ்வொரு துறைமுகத்துக்கும் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையும் பரிமாற்றப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு துறைமுகத்தினதும் தொழிற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை துறைமுக அதிகாரசபை ஒட்டுமொத்தமாக மேற்படி காலப்பகுதியில் பெற்ற வருமானம் மற்றும் இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4671/ '13

6\.

கௌரவ பி. ஹரிசன்,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு பொது நலவாய அமைப்பின் வர்த்தக மாநாடு நடாத்தப்பட்ட இடம் மற்றும் ஹோட்டல் யாதென்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டில் பங்கேற்ற வர்த்தகர்கள் பிரதிநிதித்துவம் செய்த நாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாநாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் மூலம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் பொது நலவாய அமைப்பின் வர்த்தகர் சம்மேளனத்தினால் செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாநாட்டின் பின்னர் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் மூலம் இலங்கை அரசிற்கும் மக்களுக்கும் கிடைக்கும் நன்மைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மாநாட்டிற்கு வருகைத்தந்த வர்த்தகர்களினால் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அதிக விருப்பம் காட்டிய விசேட கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4768/ '14

7.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் வாடகை செலுத்தப்பட்டு பேணிவரப்படுகின்ற உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உப தபால் அதிபர்களது சொந்தப் பணத்தில் தபால் அலுவலக கட்டிடங்களுக்கு வாடகை செலுத்த வேண்டியுள்ளதை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) ரூபா 250/= கட்டிட வாடகைக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4856/ '14

8.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு பெறுனர்களை தெரிவுசெய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அண்மையில் மக்களுக்கு கையளிக்கப்பட்ட மாளிகாவத்தை வீடமைப்புத் தொகுதியை அதன் முதல் குடியிருப்பாளர்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4871/ '14

9.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்புகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தேசிய மின் முறைமை இதுவரையில் இழந்துள்ள மின் கொள்ளளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் கன்டென்சர் தொகுதிக்கு உப்பு அல்லது அதையொத்த ஏதேனும் இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்ட கூற்றில் உண்மை உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் குற்றவாளிகளான நபர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5035/ '14

10.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தூய்மையான தேங்காய் எண்ணெய்க்கு (Virgin Coconut Oil) சர்வதேச சந்தையில் உயர் கேள்வி நிலவுகின்றது என்பதையும்;

(ii) அதிக விலைகளின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நாட்டில் தூய்மையான தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்கின்ற தொழில்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டு தூய்மையான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுசரணைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் தரத்தை உயர் மட்டத்தில் பேணிவருவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டு முறையியலொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5174/ '14

11.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்றுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன் மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5180/ '14

12.

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய தேர்தல் தொகுதியில், வெலிபென்னகஹமுல்ல தபால் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக இறுதியாக அடிக்கல் நாட்டப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தபால் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக எத்தனை தடவைகள் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வொரு தடவையும் நடத்தப்பட்ட வைபவங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது சிரமங்களுக்கு மத்தியில் பேணிவரப்படுகின்ற மேற்படி தபால் அலுவலகத்திற்காக நிரந்தர கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு யாதென்பதையும்;

(iii) அதன்படி குறித்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல், வேலைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் மக்கள் உரிமைக்காக கையளித்தல் ஆகியவற்றுக்கான திகதிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5202/ '14

13.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய பக்தர்கள் உம்ரா மற்றும் ஹஜ் யாத்திரைக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்துடன் முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்புடைய நபர் ஒரு ஆசிரியராக இருக்கும் பட்சத்தில், இவருக்கு மேற்படி யாத்திரைக்கு சம்பளத்துடனான லீவு உரித்தாகுமா என்பதையும்;

(iii) உம்ரா யாத்திரை மற்றும் ஹஜ் யாத்திரைக்கு வெளிநாடு செல்பவர்களுக்கு எளிமையான விண்ணப்பப்படிவம் மற்றும், வீசா வழங்கும் முறையியலொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான தலையீடு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி யாத்திரையில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற லீவு நாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி லீவு நாட்கள் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2731/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோதுமை மா விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு விலை மட்டங்களின் கீழ் பாண் விற்பனை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பாண் ஒன்றின் இருக்க வேண்டிய நிறை 450 கிராம்களாக இருக்க வேண்டிய போதிலும் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பாணில் உரிய நிறை கிடையாதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாண் ஒன்றில் இருக்க வேண்டிய உரிய நிறை மற்றும் பாண் ஒன்றுக்கான உரிய விலை பற்றி சம்பந்தப்பட்ட அலுவலர்களால், பேக்கரி உரிமையாளர்களும் பாண் விற்பனையாளர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) உரிய நிறையற்ற மற்றும் உரிய விலையைப் பார்க்கிலும் அதிக விலைக்குப் பாண் விற்பனை செய்பவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைத்தல் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3311/ '12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 செப்டம்பர் மாதத்திலிருந்து இற்றைவரை,

(i) வட - கிழக்கு யுத்தத்தின் பின்னர் மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதி முகாம்களின் அமைவிடங்களையும்;

(ii) அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை ஏதுமிருப்பினும் அவற்றையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2010 செப்டம்பர் மாதத்திலிருந்து இற்றைவரை,

(i) எல்.ரீ.ரீ.ஈ. சந்தேக நபர்களாகக் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(ii) ஒவ்வொரு முகாமிலும் உள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் வகைகளையும்;

(iv) அவர்களின் எதிர்கால நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீடு (திருத்தம்),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட முதலாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---